# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.58/2014

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10 வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2024 ஆண்டு டிசம்பர் மாதம் 02 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : சுப்பிரமணிய ராஜு | மதம் | : இந்து |
| த/பெ | : சுப்பராஜு | ஜாதி | : -- |
| வயது | : 73 | கிராமம் | : பீரக்குப்பம் |
| தொழில் | : விவசாயம் | வட்டம் | : திருத்தணி |

**02.12.2024**

<u>வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. நான் ஒப்பந்த தொழில் செய்கிறேன் என்றால் சரிதான். எந்த துறையில் ஒப்பந்த தொழில் செய்கிறேன் என்றால் நெடுஞ்சாலையில் ஒப்பந்த தொழில் செய்கிறேன். நான் ஸ்ரீராம பஜனை கோயில் அறங்காவலராக பதிவு செய்துள்ளேன் என்றால் பதிவு செய்யவில்லை. நான் கோவிலை நிர்வாகம் செய்வதற்காக தீர்மான புத்தகங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எங்கள் ஊரில் ராமர் கோவிலே இல்லை என்றால் சரியல்ல. பெரிய தெருவில் உள்ளது. நான் சொல்வதுபோல் ராமர் கோவில் இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எங்கள் ஊரில் ராமர் கோவிலே இல்லை என்றாலும் கிருஷ்ணர் கோவில் தான் உள்ளது என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. பாரம்பரிய கோவில் உள்ளது.

2. பிரதிவாதி மின்வாரியத்தில் வேலை செய்தார் என்றால் சரிதான். என் வீடு எங்கு உள்ளது என்றால் பெரிய தெருவில் உள்ளது. பிரதிவாதி வீட்டில் இருந்து எவ்வளவு துரத்தில் இருக்கும் என்றால் 100 மீட்டர் இருக்கும். நான் சொல்வது போல் கோவிலே இல்லை என்றாலும் நான் அறங்காவலராக இல்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. ஏப்ரல் மாதம் 2014 ல் என் மீதும் இன்னும் 10 நபர்கள் மீதும் திருத்தணி காவல் நிலையத்தில் பிரதிவாதி புகார் கொடுத்தார் என்றால் சரிதான். ராமர் கோவிலுக்கு நிறைய சொத்துக்கள் உள்ளதாகவும்

கோவிலுக்கு நிறைய பேர் சொத்தை எழுதி கொடுத்ததாகவும் நான் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். வழக்கு A அட்டவணை சொத்து கோவிலுக்கு மூதாதையர்கள் தானமாக எழுதி கொடுத்த சொத்து என சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.

3. A அட்டவணை 3ம் இலக்க சொத்தான புல எண்.41/1 யார் கோவிலுக்கு எழுதி கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. A அட்டவணை 8 இலக்க சொத்துக்களுக்கும் தானமாக எழுதி கொடுத்ததற்கான ஆவணங்களை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பூர்வீகமாக கொடுத்துள்ளார்கள். எப்போது யார் எழுதி கொடுத்தார்கள் என்றே தெரியாது. மேற்படி சொத்துக்களுக்கு வில்லங்க சான்று எடுத்து அதன் பேரில் ஆவணங்கள் நகல் எடுத்தாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா பி அட்டவணை சொத்து சம்பந்தமாக 1964ல் ஒரு பத்திரம் ஏற்பட்டுள்ளது எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. புல எண்.41/1 ஆதியில் சுப்பராஜு குமாரர் ராமபத்திர ராஜுவிற்கு பாத்தியப்பட்டது என்றால் எனக்கு தெரியாது.

4. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 3 ஆவணத்தை கிராம நிர்வாக அலுவலர் கொடுத்துள்ளார் என்றாலும் வட்டாட்சியர் கொடுக்கவில்லை என்றாலும் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சான்று சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ 2 ஆன 2014ல் கிராம நிர்வாக அலுவலரிடம் பெறப்பட்ட சாகுபடி அடங்கல் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர் கொடுத்த சாகுபடி அடங்கல் சட்டப்படி ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

5. வழக்கு பி அட்டவணை சொத்து தொடர்பாக 1960ல் இருந்து சாகுபடி அடங்கல் வாங்கி தாக்கல் செய்ய முடியுமா என்றால் முடியும். வழக்கு புல எண்.41/1 ஆதியில் சுப்பராஜு குமாரர் ராமபத்திர ராஜுவிற்கு பாத்தியப்பட்டது என்றாலும் அதை பிரதிவாதி கிரையம் பெற்று அனுபவித்து வருகிறார் என்றாலும் மேற்படி விவரங்கள் எனக்கு நன்கு தெரியும் என்றாலும் சரியல்ல. UDR காலத்தில் ராமபத்திர ராஜு என எழுதுவதற்கு பதிலாக ஸ்ரீராம பஜனை கோயில் என தவறுதலாக குறிப்பிட்டப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

6. பி அட்டவணை சொத்துக்களில் அரசு தண்ணீர் தொட்டி நுலகம் அமைக்க அரசு எங்களிடம் அனுமதி வாங்கியதா என்றால் இல்லை. நாங்கள் எந்த

அனுமதியும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு புல எண்.41/1 சொத்தை பிரதிவாதி கிரையம் பெற்றகை தெரிந்து கொண்டே எனக்கும் பிரதிவாதிக்கும் உள்ள முன்விரோதம் காரணமாக இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் இல்லை.

(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)